# ஆசைகள்

"கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ நான் உங்களுக்குள் ஆவியை பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள்", என்றார்.

எசேக்கியல் 37:5

அன்பான தேவ பிள்ளைகளே, மனுஷருடைய ஆசைகள் அவர்களுடைய மாம்சத்தில் உள்ளது. நமக்கு மாத்திரம் இந்த சதைப்பகுதியில்லாவிட்டால், சரீர உணர்வுகளே இருக்காது. இப்பொழுது கவர்ச்சியாக தோன்றும் நமது சரீர அங்கங்கள், மரித்த பின்னே, ஆண் பெண் என்ற வித்தியாசம் பெரிதாக தோன்றாமல் அறிவியலாகத்தான் காட்சியளிக்கும். இதில் விசுவாசிகளாகிய நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன?

இந்த உலகம் இச்சையாக நினைக்கத்தூண்டுகிற அங்கங்கள், வயதாகும் வேளையில், பொலிவிழந்து போகும். அதனால், சரீரத்தின் உறுப்புகள் தவறாக பயன்படுத்தபடக்கூடாது. அறிவியல் வளர்ந்த இந்த உலகில், மனுஷருக்கு தேவ ஞானம் வளரவில்லை, தேவ அறிவும் பெருகவில்லை. அதனால்தான், தேவாதி தேவன் எலும்புகளை நோக்கி பேசுகின்றார். மாம்ச இச்சைகளை நாம் வெறுக்கும்போது, நம் எலும்புகளோடு அவர் பேசுவார். தமது ஆவியை அனுப்புவார். எலும்புகளின் மேல் நரம்புகளைச்சேர்த்து, புதிய மாம்சத்தை (விண்ணுக்குரிய மாம்சமாக) உண்டாக்குவேன், உயிரடைவீர்கள் என்று கர்த்தர் உரைக்கின்றார். நரம்புகள் உணர்வுகளை எடுத்துச்செல்லும் பகுதிகள். தேவ ஆவியானவர், அவைகளைப்புதிப்பிக்கின்றார்.

அழிந்துபோகும் ஆசைகள், இளமையிலே இன்பமாகத்தோன்றும்; ஆனால் முதுமையிலே அவமானங்களாக மாறிப்போகும். கண்கள் கவர்ச்சியின் பிறப்பிடங்கள். அனுமதியளிக்கும் மனம் ஆசையின் உறைவிடங்கள். கற்பனை செய்யும் இதயம் இச்சையின் கருவறைகள். பேசினால் செயல்படுவோம், சிந்தித்தால் இருளடைவோம். மறைந்துப் போகும் இந்த சரீர அங்கங்கள், நம் மனதையும், இதயத்தையும் மாயமான கற்பனைகளை தோற்றுவிக்க கவர்ச்சி என்ற போர்வைக்குள் தள்ளுகின்றது. இதை உணரும் இதயம் திருந்தும். தேவனைத்தேடும். தேடும் மனம் சமாதானம் பெறும். சமாதானம் தேவனிடமுள்ளது. அவர் ஆவியான மெய்த்தேவன். அவர் எலும்புகளிடம் பேச விரும்புகின்றார்.

'மாம்சமே சற்றே அடங்கும், என் தேவன் பேசட்டும்', என்போம். புதுவடிவம் பெறுவோம்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக,

ஆமென், அல்லேலுயா.

J E S U S I S L O R D